# ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் 5 ஆண்டு சாதனைகள்!

தமிழ் மொழியில் கல்லூரிக் கல்வி பயிலும் மாணாக்கரின் வாசிப்புக்காக 1961ல் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு பாடநூல் கழகம் இன்று தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமாக வளர்ந்துள்ளது. 1967 முதல் 1974 வரை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 875 நூல்கள் வெளியிடப்பட்டு சாதனை படைத்தது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன் வெளியான இந்த அரிய நூல்களிலிருந்து இன்றும் UPSC போன்ற குடிமைப் பணித்தேர்வுகளுக்கு கேள்விகள் கேட்கப்படு கின்றன. இந்நூல்களை பல பதிப்பகங்களி லிருந்து சேகரிக்கப்பட்டு மூலநூலுடன் ஒப்பிட்டு மின்னாக்கம் செய்து குடிமைப் பணி தேர்வர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு பயன்படும் வகையில் பாடநூல் கழகத்தின் வெளியீட்டுப் பிரிவு 875 நூல்களையும் மீண்டும் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

### 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் வெற்றிச் சாதனைகள்!

கடந்த 5 ஆண்டுகளில் சட்டமன்றத்தில் கல்வித்துறை சார்பாக முதல்வர் 20 திட்டங்களை அறிவித்தார்.

### வெளியீட்டுப் பிரிவின் முக்கியத் திட்டங்கள்

### முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் — 205

உயர்கல்வி பயிலும் தமிழ்நாடு மாணாக்கர் கூடுதல் வாசிப்புக்காகவும் ஆய்வு மனப்பான்மையை உருவாக் கவும் போட்டித்தேர்வுகளுக்குத் தயார்ப்படுத்த வும் மருத்துவம், பொறியியல், அறிவியல் & தொழில்நுட்பம் மனித வியல் துறைகளில் தற்காலத்துக்கேற்ப உலகின் தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதி உலகப் புகழ்பெற்ற பதிப்பகங்கள் வெளியிடும் புத்தகங்கள் ஆங்கிலத்தில் தமிழாக்கம் செய்து வெளியாகி உள்ளன.

கைடன் மற்றும் ஹால் மருத்துவ உடற்செயலியல் பாடநூல்-Guyton & Hall Textbook of Medical Physiology Third South Asia Edition இதுவரை 205 நூல்கள் வெளியாகி உள்ளன. வரும் ஆண்டில் மேலும் 100 நூல்கள் வெளியாக உள்ளன.

### திசை தோறும் திராவிடம் 78

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொன்மையும் தொடர்பும் கொண்ட தமிழ் மொழியில் வெளியாகும் சிறந்த இலக்கியங்களும் அரிய நூல்களும் திராவிடச் சிந்தனைகளின் பொக்கிஷங்கள் ஆகும். இந்த படைப்புகளை உலக அளவில் கொண்டு செல்லும் வகையில் சிறந்த தமிழ் நூல்களைத் தேர்வு செய்து ஆங்கிலம் மற்றும் பிற திராவிட மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளியிடப்படுகின்றன. இதுவரை 78 புத்தகங்கள் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

### வ.உ.சி. 150 ஆவது பிறந்த ஆண்டு — தமிழக அரசு சிறப்புத் திட்டம்

சுதந்தரப் போராட்ட வீரரும் தமிழறிஞருமான வ. உ. சிதம்பரனார் தன் வாழ்நாளில் கடும் போராட்டங்களுக்கு இடையிலும் எண்ணற்ற ஆய்வுநூல்களை எழுதியுள்ளது டன் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்துள்ளார். அவரது எழுத்துகள் அனைத்தும் அச்சேறாத நிலையில் அவரது 150 ஆவது பிறந்த நாளில் அவரது எழுத்துகள் அனைத்தும் திரட்டுகளாக வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் வ. உ சி எழுத்துகள் அனைத்தும் முதல் முறையாக நான்கு தொகுதிகளில் நூல் வடிவம் கண்டுள்ளது.

### இளந்தளிர் இலக்கியத் திட்டம் 188

சிறார் மனதை கதைகளாலும் வண்ணங்களாலும் அழகூட்டும் முயற்சியே இத் திட்டம். சிறார்களின் படைப் பூக்கத்தினையும் சமூகத் திறன்களையும் ஊக்கப்படுத்தும் முயற்சியாக சிறார்களுக்கான நூல்களை ஒரு கதை - ஒரு புத்தகம் என்ற அளவில் தமிழ்நாட்டின் தலைசிறந்த சிறார் படைப்பாளிகளைக் கொண்டு எழுதச் செய்து சிறந்த ஓவியர்களின் கலை வண்ணத்தில் அனைத்தும் வண் ணங்களாக வெளியிடப்படுகின்றன.

5-8, 9-11, 12-14 ஆகிய மூன்று வயதுப்பிரிவுகளாகப் பிரித்து அக்குழந்தைகளுக்குப் பொருத்தமான கதைக ளும் ஓவியங்களும் தீட்டப்படுகின்றன. அறிந்ததில் இருந்து அறியாததை நோக்கி என்ற அடிப்படையில் கதைக்கருக்கள் உருவாக்கப்பட்டு பன்மையம், சமூக நீதி, சமத்துவம், சுற்றுச்சூழல்தூய்மைஆகியவிழுமியங்களில் சரியான தகவல்கள் உறுதிப்படுத்தப்படுகிறது.

இதுவரை 188 சிறார் புத்தகங்கள் வெளியாகி உள் ளன. இன்னும் பல நூறு புத்தகங்கள் வெளியாக உள் ளன. குறிப்பாக, உலக கிளாசிக்ஸ் நாவல்களின்

குழந்தைகளுக்கான தமிழ் பதிப்பு, மாங்கா காமிக்ஸ் போன்ற புகழ்பெற்ற சிறார் காமிக்ஸ் தமிழாக்கம், ஈரான், துருக்கி சிறார் கதைகள் தமிழாக்கம், 5 வயதுக்குக் கீழான மழலைகளுக்கான படப் புத்தகங்கள் இவற்றில் உள்ளடக்கம்.

### நாளைய தலைமுறைக்கு நாட்டுடமை நூல்கள் — 49

தமிழின் தொன்மைச் சிறப்பு மிக்க இலக்கியங்களைப் போல தற்காலத்திலும் நவீன சிந்தனைகளை வெளிப்ப டுத்தும் சிந்தனையாளர்கள் உள்ளனர். இவர்களையும் இவர்களது படைப்புகளையும் சிறப்பிக்கும் வகையில் இவ் வகையில் பங்களிப்பு செய்யும் அளப்பரிய எழுத்தா ளர்களின் படைப்புகளை நாட்டுடைமை ஆக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இப் படைப்புகள் நாளைய தலைமு றைகளுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நூல்கள் தேர்வு செய்யப்பட்டு மதிப்புக்கூடுதல் சேர்த்து மறு பதிப்பு செய்யப்படுகின்றன. இதுவரை 49 நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இன்னும் நூற்றுக்கும் அதிகமான படைப்பு கள் வெளியிடப்பட உள்ளன.

### நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் நினைவுத்தடங்கள் — 8

சென்ற நூற்றாண்டு முழுவதும் தங்கள் சிகரப்படைப்புகளாலும் அறிவுக்களஞ்சியங்களாலும் தமி ழுக்கு அழகு சேர்த்த இலக்கியப் பெருமான்கள் பலர். அன் னார் நூற்றாண்டு காணும் போது அவர்களுக்குச் சிறப்பு செய்யும் வகையில் ஆங்கிலத்தில் Reader என்று வெளிவ ருவதுபோல தமிழில் நினைவுத்தடம் வெளியிடும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பேராசிரியர் அன்பழகன், கி. ராஜநாராயணன், கு. அழ கிரிசாமி, தி. ஜானகிராமன், அழ. வள்ளியப்பா, கலைஞர் படைப்புலகம், தமிழ் ஒளி படைப்புலகம் வெளியாகி உள் ளன. தத்துவ மேதை, டி. கே. சீனிவாசன், ஏ. வி. சி. ஆசைத்தம்பி, புலியூர்க்கேசிகன், குன்றக்குடி அடிகளார், தொ. மு. சி. ரகுநாதன், ராஜம் கிருஷ்ணன் ஆகிய 8 நூற் றாண்டு நாயகர்களின் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### தமிழ்ப் பேறறிஞர் பெ.தூரன் தொகுத்த கலைக்களஞ்சியங்கள் — 20

தமிழ்ப் பேறறிஞர் பெ.தூரன் அவர்களைக் கொண்டு வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள், குழந் தைகள் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் அரிய பொக்கி ஷங்கள் ஆகும்அச்சில் இல்லாமல் இருந்தன. இவை தற்போது ஆவணப்பதிப்பாக வெளிவந்துள்ளன.

### செவ்வியல் இலக்கியங்கள் எளிய உரையுடன் — 21

தமிழின் செவ்வியல் இலக்கியங்கள் என அறிவிக்கப் பட்டுள்ள 41 இலக்கியங்களும் மாணாக்கரும் மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் சந்தி பிரித்து எளி மையான உரையுடன் பதிப்பிக்கும் திட்டம் தமிழ் வளர்ச் சித் துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. 5 ஆண்டுகளில் பத்துப்பாட்டில் இடம் பெறும் 10 நூல்களும், குறுந்தொகை, பதிற்றுப்பத்து, களவியல், புறநானூறு, பரி பாடல், ஆகிய 5 நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### திராவிடக் களஞ்சியம்— 13 திராவிடக்களஞ்சியம்திட்டவிளக்கம்.

‘திராவிடம்’ என்ற சொல் கடந்த இருநூற்றாண்டு கால மாக மானிடவியல், மொழியியல், வரலாறு, பண்பாட்டு ஆய்வு ஆகிய களங்களில் தெற்காசியாவில் வாழும் ஒரு மக்கள் இனத்தை, மொழிக்குடும்பத்தை, பண்பாட்டுக் குழுமத்தைச் சுட்டிக்காட்டவும்; இக்காலத் தமிழ்நாட்டுப் பொதுமக்களிடையே வளர்ச்சி அடைந்து செல்வாக்குச் செலுத்தும் சமுதாய விடுதலை இயக்கத்தின் கருத்து நிலையைச் சுட்டிக்காட்டவும் பயன்படுத்தப்படுகின்றது.

அறிவுத்துறையில் களஞ்சியம் என்ற சொல் ஒருபொ ருள் அல்லது பலபொருள் குறித்து பலஅறிஞர்களின் எழுத் துகளைத் தொகுப்பாகக் கொண்டிருக்கும் நோக்கு நூல் படைப்பு (a reference work or compendium providing summaries of knowledge either general or special to a particular field or discipline) எனப் பொருள் கூறப்படுகின்றது. ‘திராவிடக்களஞ்சியம்’ என்பது, திராவி டச்சிந்தனை பற்றிய அறிவுக்களஞ்சியத் தொகுப்பு, திரா விட இயக்க ஆக்கங்களின் திரட்டு, திராவிடம் பற்றிய ஆய் வுகளின் தொகுப்பு ஆகும்.

அண்மைக்கால அகழ்வாய்வு முடிவுகள் திராவிடப் பண்பாட்டின் தொன்மை தொடர்ச்சி குறித்து அறிவியல் பூர்வமான முடிவுகளை வழங்கிவரும் நிலையில் திராவி டக்களஞ்சியம் திரட்டுகள் வெளிவருவது வரலாற்று முக்கி யத்துவம் வாய்ந்தது ஆகும். திராவிடப் பண்பாட்டின் தொன்மை என்பது தமிழ்மொழி வரலாற்றின் தொன்மை யுமாகும். இந்த நெடும் வரலாற்றில் பண்பாட்டுப் படையெ டுப்புகளையும் எதிர்கொண்டே வந்திருக்கிறது. இதன் தொடர்பில் உருவானதே திராவிட இயக்கம் ஆகும்.

திராவிட இயக்க வளர்ச்சி என்பது நமது முன்னேற்றத்தின் ஒரு அங்கமாகும். இத்தகைய நெடிய திராவிட பண்பாட்டின் வளர்ச்சி குறித்தும் திராவிட இயக் கம் குறித்துமான அனைத்து கருத்துகளையும் மாற்றங்க ளையும் களஞ்சியமாகத் தொகுத்து ஆவணப்படுத்துவதே திராவிடக்களஞ்சியம் திட்டத்தின் நோக்கமாகும்.

திராவிடக் களஞ்சியம் என்பது ஒரு சமூகப்பண்பாட்டுக் கருத்துநிலை தொடர்பான களஞ்சியம்; திராவிட இயக்க எழுத்துகளின் திரட்டு ஆகும். மேலும், இத்திரட்டில் திரா விட இயக்கம் குறித்த தலைசிறந்த பல்துறை அறிஞர்க ளின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் ஆக்கங்களும் தொகுக் கப்படுகின்றன. இத்திராவிடக் களஞ்சியம் பொதுமக்கள் அறிவுத்தேவையின் பொருட்டுத் தயாரிக்கப்பட வேண்டி யுள்ளது. திராவிட இயக்கத்தின் கருத்தியல்கள், படைப்புவ ளம் குறித்த ஆய்வுகளில் வல்லமை பெற்ற வல்லுநர்கள் குழுவைக்கொண்டுஇந்தபணிகடந்தமூன்றாண்டுகளாக நடந்து வருகிறது.

13 திரட்டுகளாகத் திட்டமிட்டுள்ள இப்பணியில் முதல் கட்டமாக கீழ்க்காணும் 7 திரட்டுகள்வெளியிடப்பட்டது.

### உலக மொழிகளில் பெரியார் 42

பெரியாரின் பகுத்தறிவு மெய்யியல் சிந்தனைகளுக்கு இன்றைக்கு உலக அளவில் பரவி வருகிறது. தந்தை பெரி யாரின் சிந்தனைகள் இன்றைய உலகத் தேவைகளுக் குப் பொருத்தப்பாடாக இருப்பதே காரணம். இதனால் பெரி யாரின் சிந்தனைகளை ஆங்கிலம் தவிர்த்த 21 இந்திய - உலக மொழிகளில் திட்டத்தின் முதல் கட்டமாக அவரது 5 நூல்கள் தேர்வு செய்யப்பட்டு 21மொழிகளில் வெளியா கியுள்ளது. இரண்டாம் பாகம் இந்த ஆண்டு 21 மொழிக ளில் வெளியாகி மொத்தம் 42 நூல்கள் வெளியிடப்பட் டுள்ளன.

### சிறார்களுக்கு பிறமொழி இலக்கியம் — 74

சிறார்களின் வாசிப்புத் திறனை விரிவுபடுத்தும் வகை யில் உலகின் தலைசிறந்த உலக இலக்கியங்களை சிறார் களுக்கு ஏற்ப தமிழில் எழுதியும் இதேபோலபிற மொழிக ளில் வெளியான சிறந்த சிறார் இலக்கியங்களை மொழியாக்கம்செய்தும் வெளியிட்டுள்ளோம். இதுவரை, 74 நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### இந்திய ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி

இந்தோ ஐரோப்பிய மொழிகளின் வேர்ச் சொற்களை ஒப்பீட்டு ஆய்வு செய்து அகராதிப்படுத்தும் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகி றது. இந்த ஆண்டு முதல் தொகுதி தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளில் வெளியாகியுள்ளன.

### தேன்சிட்டு, புது ஊஞ்சல், கனவு ஆசிரியர்

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இடைநிறுத்தப் பட்ட வகுப்பறைக் கல்வி மாணாக்கர் மத்தியிலும் சிறார் மனதிலும் ஏற்பட்டிருந்த உளவியல் அடிப்படையிலான பாதிப்பு திராவிட மாடல் அரசுக்குச் சவாலாக இருந்தது. ஏற் கனவே மதிப்பெண் அடிப்படையிலான கற்றல் செயல்பாடு ளால் சோர்வடைபவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டிய தேவை நமது கல்வி அமைப்பில் இருந்தது. இதையொட்டி எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளில் ஒன்று மாணாக்கருக் கான பருவ இதழ்கள் நடத்துவது.



**திண்டுக்கல் ஐ.லியோனி**
தலைவர்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

3- 5 வகுப்பு மாணாக்கருக்கு தேன்சிட்டு, 6 - 9 வகுப்பு மாணாக்கருக்கு புது ஊஞ்சல் என இரண்டு மாதமிரு முறை பருவ இதழ்கள் கொண்டுவரப்படும் என அரசு அறி வித்தது. வகுப்பறைக்கு ஒரு பிரதி என தமிழ்நாடு முழுவ தும் உள்ள அரசு பள்ளிகளில் உள்ள சுமார் 70 ஆயிரம் வகுப்பறைக்கு இந்த இரு இதழ்களும் விலையில்லாமல் அனுப்பப்படுகின்றன. தவிர ஆசிரியர்கள் புத்தாக்கத்திற்கும் கனவு ஆசிரியர் மாத இதழ் கொண்டுவ ரப்படுகிறது. இதற்கான ஆசிரியர் குழுவில் சிறார் இலக்கி யம் மற்றும் இதழியலில் அனுபவம் கொண்ட எழுத்தா ளர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். அரசு பள்ளிகளுக்கு மட்டும் அனுப்பப்பட்டு வந்த இந்த இதழ்கள் முதல்வர் உத் தரவின் பேரின் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. மேலும் தனியார் பள்ளி மாணவர் கள், ஆசிரியர்கள் பயனடையும் வகையில் சந்தா அடிப்ப டையில் அவர்கள் முகவரிக்கே அனுப்பப்படுகின்றன.

### சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சி

உலகின் அரிய இலக்கண, இலக்கியங்களைப் படைத் தாலும் தமிழின் தொன்மையும் தொடர்பும் உலகம் அறி யாமல் இருக்கிறது. இதேபோல உலக அறிவுச் செல்வமும் தமிழுக்கு அவசியமாக இருக்கிறது.

தமிழை உலகறியச் செய்வதும். உலகை தமிழ் அறி யச்செய்வதும் எனும் நோக்கில் சென்னை பன்னாட்டு புத் தகக் கண்காட்சி கடந்த 4 ஆண்டுகளாக பொது நூலக இயக்ககத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.

நடப்பாண்டு பன்னாட்டு புத்தகக் காட்சியில் அமெ ரிக்கா, மலேசியா, துருக்கி, தான்சானியா, பிரான்ஸ், பிரிட் டன், ஜெர்மனி உட்பட 102-க்கும் மேலான நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள், எழுத் தாளர்கள் பங்கேற்றனர்.

இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத் தில் வெளியிட்ட பதிவில், “இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவாறு தமிழக பள்ளிக்கல்வித் துறையின் தனித்துவ முன்னெடுப்பான சென்னை பன் னாட்டுப் புத்தகத் திருவிழா புதிய மைல்கற்களை அடைந் துள்ளது. நமது எழுத்தாளர்கள் ஞானபீடம் அல்ல, நோபல் பரிசே பெற உயர்வுள்ளுவோம். இந்த வியத்தகு சாத னைக்காக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக் கும், துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகள்” என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

### 100 இடங்களில் புத்தக நிலையங்கள்

வெளியீட்டுப் பிரிவு நூல்கள் முதலமைச்சர் உத்தரவுக் கிணங்க அனைத்து மாவட்ட புத்தகங்கள் காட்சிப் படுத்தி விற்பனைசெய்யப்படுகின்றன. தலைமைநிலையத்திலும் பேராசிரியர் அன்பழகன் நினைவு புத்தக விற்பனை நிலையம் அரசால் தொடங்கப்பட்டுள்ளது. தவிர அரசு கல் லூரி நூலகங்கள், அறிவுசார் மையங்கள் ஆகியவற்றுக் கும் புத்தகங்கள் வழங்கப்படுகிறது. கடந்த 5 ஆண்டுக ளில் சுமார் 6 கோடி ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகி உள்ளன. லாப நோக்கின்றி விற்பனை செய்யப்படுவதால் வெளி புத்தகச் சந்தை மதிப்பில் இது சுமார் ரூ 9 முதல் 10 கோடி ஆகும்.

வெளியீட்டுப் பிரிவு நூல்களை மேலும் கொண்டு சேர்க் கும் வகையில் மாநிலம் முழுவதும் 100 இடங்களில் புத் தக விற்பனை நிலையங்கள் திறக்கப்படும் என திராவிட மாடல் அரசு அறிவித்தது. இதன் தொடக்கம் மார்ச் 1 அன்று ஆசியாவின் பழைமையான புத்தக விற்பனை நிலையங் களில் ஒன்றான சென்னை ஹிக்கின்பாதம்ஸ் புத்தக விற் பனை நிலையம் மற்றும் சென்னை செட்ரல் நிலையத்தில் தொடங்கப்பட்டது.

இப்படி ஒவ்வொரு பணியாக ஆய்வு செய்து பார்க்கை யில் இவை திராவிட மாடல் அரசின் இந்த முயற்சி ஒரு முன் மாதிரி செயல்பாடு என்பதில் ஐயமில்லை.

### சிறப்புத் திட்டங்கள்

1. முதலமைச்சர் சட்டமன்றத்தில் 110விதியின் கீழ் அறி வித்த வைக்கம் போராட்டம் பற்றிய குறுநூலை மலையா ளத்திலும், கன்னடத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டு உள்ளோம்.

2. பேராசிரியர் மொழியியல் அறிஞர் கு.அரசேந்திரன் அவர்களின் படைப்பில் இந்தோ ஐரோப்பிய மொழிகளின் ஒப்பீட்டு அகராதி அறிமுக நூல் மூன்று தொகுப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச்சொற்கள்தான் உலக மொழிகளுக்கெல்லாம் மூலம் என்பது இந்த நூல்கள் மூலம் நிறுவப்பட்டுள்ளன.

3. மிளிரும் தமிழகம் 2025, சோழர்களின் கலை, பண்பாடு கட்டிடக்கலை பற்றிய சிறப்பு நூல்.

4. இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றிய 4 தொகுதிகளும், தமிழ் நாட்டில் காந்தி எனும் நூல் ஆங்கிலத்திலும் வெளி யிடப்பட்டுள்ளது.

5. பட்டயத்தேர்வு நூல்கள் Taxman’s Cracker 5 நூல் கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு வரலாற்று நூல் கள் பல்லவர் வரலாறு, மொகஞ்சதாரோ சிந்து சமவெளி நாகரிகம் ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

6.உலகப் பொதுமறை திருக்குறள் 45 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

7.500 தமிழ் இலக்கிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம் , மணிமேகலை ஆங்கிலத்தில் மொழிபெ யர்க்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் பள்ளிகளில் படிக்கும் பாடநூல்களில் வேற்று மாநில மாணவர்கள் அவரவர் தாய்மொழியில் படித்திட, இந்தி, உருது, மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற பல மொழி பாடநூல்களும் அவர்களு டைய எண்ணிக்கை அடிப்படையில் அச்சிடப்பட்டு வழங் கப்பட்டு வருகிறது.

தமிழக முதல்வர், மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் சட்டமன்ற அறிவிப்புகளின் படி , முத்தமிழ் அறிஞர் கலை ஞர் மொழிபெயர்ப்புத்திட்டத்தில் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு 43 நூல்களும், பொறியியல் கால் நடை அறிவியல் உள்ளிட்ட 173 நூல்களும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

உலகெல்லாம் தமிழ்மொழியும் அதன் இலக்கியங்கள் பரவும் வகை செய்து, உலகில் உள்ள பன்னாட்டு இலக்கி யங்களை தமிழ்மொழிக்கு கொண்டு வந்து சேர்த்த மாபெரும் அறிவுப் புரட்சியை தமிழக முதல்வர் பாடநூல் கழகம் மூலம் சாதனை படைத்துள்ளார்.





திராவிட முன்னேற்றக் கழகத்தின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும், ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதன் கூட்டணி கட்சிகளை கண்டித்தும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதி – மின்ட் பஸ் டிப்போ மற்றும் கல்மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்களில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி கண்டன உரையாற்றினார். பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், செயற்குழு உறுப்பினர், தொகுதி பொறுப்பாளர், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

---

### உடுமலை கொடைவள்ளல் கெங்குசாமி துணைவியார்

## திருமதி.ராஜலட்சுமி அம்மையார் மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 17-

உடுமலை கொடைவள்ளல் கெங்குசாமி அவர்களின் துணைவியார் மறைவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

உடுமலை கொடைவள்ளல் நினைவில் வாழும் கெங்குசாமி அவர்களின் துணைவியார் திருமதி ராஜலட்சுமி அம்மையார் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் எஸ்.வி. மில் குழுமத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டில் ஜனனி சுரக்ஷா யோஜனா (JSY) இன் தற்போதைய நிலை என்ன?

## கர்ப்பிணிப் பெண்களுக்கு பண உதவி சென்றடைவது உறுதி செய்யப்படுகிறதா?

### மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!

*புதுடெல்லி, மார்ச் 17-*

*கள்ளக்குறிச்சி நாடாளு மன்ற உறுப்பினர் தே. மலை யரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி பின்வருமாறு :-*

*தமிழ்நாட்டில் ஜனனி சுரக்ஷா யோஜனா JSY இன் தற்போதைய நிலை, என்ன ? கடந்த 3 ஆண்டுகளில் திட் டத்தின் கீழ் பயனாளிகளின் எவ்வளவு? ( மாவட்ட வாரி யாக) அதே காலகட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட மாநிலத் தில்JSYக்காக விடுவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் அளவு எவ்வளவு?*



*மாநிலத்திற்குள் JSY இன் கீழ் வசதி செய்யப்பட்ட நிறு வன விநியோகங்களின் எண் ணிக்கை எவ்வளவு?*

*குறிப்பாக நாட்டின் தொலைதூர மற்றும் சேவை செய்யப்படாத பகுதிகளில் உள்ள தகுதியுள்ள கர்ப்பி ணிப் பெண்களுக்கு சரியான நேரத்தில் பண உதவி சென்ற டைவதை உறுதி செய்ய ஒன் றிய அரசு எடுத்த நடவடிக் கைகள் என்ன?*

*மாநிலத்தில் ஒதுக்கப் பட்ட மற்றும் பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு தாய்வழி சுகாதார சேவைகளை விரை வாக அணுகுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?*

*இவ்வாறு தே. மலையர சன் கேள்வி எழுப்பினார்.*